**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண்.83/2020</u>**

**நாள்– 13.02.2026**

**வா.சா. 1 – துளசி (எ) துளசிமணி**

**<u>3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

1) நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் சர்வே எண்.183/6J1 என்பது சரியானது என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் நான் அவ்வாறு ஆவணங்களைத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரையப் பத்திரம் 1983ம் ஆண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் தாவா சொத்தினை கிரையம் பெறும்போதே சொத்து விவரத்தினை சரிபார்த்து கிரையம் பெற்றிருக்க வேண்டும் என்றாலும், 35 ஆண்டுகள் கழித்து தற்போது கிரையப் பத்திரத்தில் சர்வே எண்ணினை திருத்தம் செய்வது செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2) வா.சா.ஆ.1ல் உள்ள பிழையை திருத்தம் செய்ய வேண்டி 3ம் பிரதிவாதிக்கு விண்ணப்பம் செய்தேனா என்றால் உரிய ஆவணங்களோடு அறிவிப்பு அனுப்பினேன். நான் கூறுவதுபோல் 3ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும், அவ்வாறு அறிவிப்பு அனுப்பியிருந்தால் அதனை நீதிமன்றத்தில் ஆவணமாகத் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. அரசுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும்போது பிரிவு 80ன் படி அரசுக்கு அறிவிப்பு அனுப்பியிருக்க வேண்டும் என்றாலும், நான் அவ்வாறு அறிவிப்பு அனுப்பாததால் மேற்படி வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் மாவட்ட ஆட்சியரை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கிற்கு வழக்கு மூலமே இல்லை என்றாலும், தாவா சொத்து விவரம் தவறாக உள்ளது என்றாலும் சரியல்ல.

3) முத்திரைத்தாள் சட்டம் பிரிவு 47B படி ஆவணத்தினை தரப்பினர் இருவரும் சார்பதிவாளர் அவர்களிடம் தகுந்த முத்திரைத்தாள் செலுத்தி விண்ணப்பம் செய்திருக்க வேண்டும் என்றாலும், நீதிமன்றத்தில் பரிகாரம் கோர முடியாது என்றாலும் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**